காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

24-4-66

விலை 20 காசு

உலக அரங்கில்

மற்றவர்கள் நிழலில் மறைந்து நின்று வெயிலின் வெப்பத்தைத் தடுத்துக்கொள்ள முயலுவதுபோல வெளிநாட்டு விவகாரங்களில் அவ்வப்போது நிகழ்ந்துவரும் நடைமுறைத் தவறுதல்களுக்கு — கொள்கைக் குழப்பங்களுக்கு—அதனுல் எழும் கண்டனங்களுக்குத் தூதுவர்களை அல்லது அமைசசரக, ஊழியர்களைக் காரணம் காட்டித் தப்பித்துவர முயல்கின்றனர் இந்திய அரசினர்.

மதிநுட்பத்துக்கும் செயல் திறமைக்கும்தான் தூதுவர்கள், அலுவலர்கள் பொறுப்பே தவிர, அடிப்படைக் கொள்கைக்கே அல்ல; அதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் அரசினர்தான்.

அரசாங்க அனுமதியுடன் அப்துல்லா அரபு நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தபோது அங்குள்ள இந்தியத் தூதுவர் புதுடில்லிப் பாராளுமன்றத்தில் கண்டிக்கப்பட்டதும் சீன விருந்தில் ஏன் கலந்துகொண்டார் என்று பீகிங் நகரத்திலுள்ள இந்தியத தூதுவர் விமர்சிக்கப்பட்டதும் ஓரளவுக்கு அவர்கள் முன்யோசனை காட்டத தவறியதனுல் என்றபோதிலும் அவர்களுக்கு முன்கூட்டியே புதிய சூழ்நிலைகளுக்கேற்ப நடந்துகொள்ளும் முறைமைகள்பற்றிக்குறிப்புகள்அனுப்பிவைக்காத அடிப்படைத் தவறு அரசினரைத்தான் சாரும்.

இதை மெய்ப்பிக்கும் வகையில், இப்போது ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது.

தலைமை அமைச்சர் இந்திரா அமெரிக்கப் பயணத்தை முடித்த ஓரிரு நாட்களில் வாஷிங்டனிலுளள பால்டிமோர்சன் இதழ் எட்டுக கட்ட தலைப்பில் "வியடநாமியக கொள்கையில் இந்தியா முன்னுக்குப் பின் முரணுகப் பேசுகிறதே; என்ன நியாயம்?" என்று கேள்வி எழுப்பியது. இதையே மற்ெறுரு புகழ் பெற்ற நியூயார்க் டைம்ஸ் நாளிதழும் பின்பற்றியது. இந்திராவிடம் புன்முறுவல் காட்டிய அமெரிக்க மக்களது முகங்களில வெறுப்பும் வியப்பும் தோன்றின. அரசியல் வட்டாரம் பரபரப்புக் காட்டிற்று. செய்தி வெள்ளை மாளிகைக்கும் எட்டியது. வாஷிங்டனில் உள்ள இந்தியத் தூதுவரக அதிகாரிகளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கண்களையும் கட்டி இருட்டிலேயும் விடப்பட்டதைப் போன்று உழன்றுர்கள்.

இவையனைததுக்கும் காரணமாயிருந்தது இந்தியப் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட வெளி விவகார அமைச்சரவையின் ஆண்டு அறிக்கைதான்.

> "தெற்கு வியட்நாமிலிருந்து அமெரிக்கப் படைகள் எந்தவித நிபந்தனையுமின்றி வெளியேற வேண்டும்."

என்று, அதில் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துக்கள்தான்.

ஓரிரு நாட்களுக்கு முன்னர்,

> **"ஜான்சன் வியட்நாம் பிரச்சனையில் பெற விரும்பும் அமைதி வழி முடிவைப் பாராட்டுகிறேன். வியட்நாமில் காணப்படும் உயிர், பொருட்சேதங்களுக்கு அமெரிக்கா மட்டுமே பொறுப்பு என்ற ஒருதலைப் பட்சமான முடிவை ஏற்க நான் தயாராயில்லை."**

என்று இந்திரா பாராட்டியதும்,

> **"இந்தியா இந்த விவகாரத்தில் இத்தகைய நடுநிலையை மேற்கொண்டிருப்பது வியட்நாமிய பிரச்சனைக்கே ஒரு நல்ல முடிவைப் பெற்றுத் தரும்."**

என ஜான்சன் பதிலுக்கு நம்பிக்கையும் நன்றியும் தெரிவித்துப் பேசியதையும் காதால் கேட்டும் கணணுல் பார்த்தும் அனுபவித்த அமெரிக்கர்களுக்கு இந்திய வெளி விவகார அமைச்சரவையின் மேலே குறிப்பிடப்பட்ட ஆண்டு அறிக்கை அதிர்ச்சியைத் தந்திருப்பதில் சிறப்பு ஏதும் இல்லை.

காலஞ் சென்ற பிரதமர் சாஸ்திரி ஒட்டா சென்றிருந்தபோதும் யுகோஸ்லேவிய பிரதமர் புட்டோவிடம் பேச்சு வார்த்தை நடத்தியபோதும் வியட்நாம் பிரச்சனையில் இந்தியாவின் அதிகாரபூர்வமான கொளகை இதுதான் என மூன்று வகைகளில் விளக்கியுள்ளார்.

(1) தெற்கு வியட்நாமிலிருந்து அமெரிக்கப் படைகள் திரும்பப் பெறவேண்டும் என்று கூறுவதுபோலவே அஙகு ஆயிரக்கணக்கில் இருக்கும் வடவியட்நாமைச் சேர்ந்த ஆயுதமேந்திய ஊடுருவல்காரர்களும் வெளியேற வேணடும்,

(2) ஒரு அரசியல் முடிவுக்குப் பினனர்தான் படைகள் வெளியேற்றம் எனபது எழுமே தவிர அது இல்லாமலோ அலலது அதற்கு முன்போ அல்ல.

(3) தெற்கு வியட்நாமிய அரசு விருமபினுல் அமெரிக்க அல்லது வேறு வெளிநாட்டு உதவியைக கேட்டுப் பெறும் உரிமை அதற்கு உண்டு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதி.

இந்த மூன்றுக்கும் "தெற்கு வியட்நாமிலிருந்து அமெரிக்கப் படைகள் நிபந்தனையில்லாமல் வெளியேற வேண்டும்" என்ற இந்திய வெளிவிவகார அமைச்சரவையின் ஆணடு அறிக்கைக்கும் உள்ள பெருத்த கருத்து பேதத்தைக் கோடுகள் கிழித்துப் பால் கணக்குப் போடும் படிப்பு அறிவு இல்லாத வீட்டுப் பெண் கூட புரிந்துகொள்வாள்.

எனவேதான் அமெரிக்காவில் கேள்விக் குறி மூலைக்கு மூலை எழுந்தது. கனிவு காட்டி இந்திராவை வழியனுப்பி வைத்தவர்கள் அங்குள்ள இந்தியத் தூதுவரக அதிகாரிகளைக் கடுகடுப்புடன் நோக்கி "இதற்கு என்ன விளக்கம் தரப் போகிறீர்கள்?" என்று கேட்காமல் கேட்டனர்.

உடன் மூன்ரும் நபருக்குத் தெரியாமல் புதுடில்லியிலுள்ள அமெரிக்கத் தூதுவரக உயர் அதிகாரி ஒருவரை அவசர அவசரமாக அழைத்தார் அமைச்சர் ஸ்வரண் சிங். "ஆண்டு அறிக்கை தவறின் விளைவுதான்; வருந்துகிறேம். அறிககை தயாரிததததில் அலுவலர்கள் தவறு விளைவித்துவிட்டனர்; என்ருலும் இது இந்தியாவின் அதிகாரபூர்வமான கொள்கையாகாது" என விளக்கம் கோரிய அமெரிக்கத் தூதுவருக்கு வருத்தம் தெரிவித்து சமாதானம் சொல்லப்பட்டது.

புதுடில்லி நிலைமைகளை வாஷிங்டனிலிருந்தபடியே சுவாசம் பிடித்த பத்திரிகையாளர் ஒருவர் "ஆணடு அறிக்கையை இவ்வாறு தவருகத் தயாரித்ததற்காக வெளிவிவகார அமைச்சரவையின் துணைக் காரியதரிசி ஆர்.சி. அரோரா (R.C.Arora) என்பவர் கண்டிக்கப்பட்டிருக்கிருர்" என்றுஎழுதியுள்ளார். தெனகிழக்கு ஆசியப் பகுதி அரசியலுக்

கூடமும், ஆடலும்?

கெனவே முழுப்பொறுப்புள்ள அந்த அதிகாரி எவ்வாறு இவ்வளவு வெளிப்படையான தவறுதலைச் செய்திருகக முடியும் என்ற கேள்வியும் உடன வெளிவிவகார அமைச்சரவையில் எழுந்தது.

பின்னர் அதற்காகக் கிடைத்த விளககமோ வெளிவிவகார அமைசசரையே பாதிப்பதாக இருநதது. கடந்த ஆண்டு ஆகஸ்ட திங்கள் 31-ம் நாள மாநிலங்கள் அவையில் ஸ்வரண் சிங் வியட்நாம பிரச்சனை பற்றி என்ன பேசினுரோ, அதே கருதது

(15-ம் பககம் பாரகக)

இன்றே செய்க!

மண்ணில் நடக்கின்ற அத்தனைக் கொடுமைகட்கும் நிச்சயம் ஒருவித பரிகாரம் இருக்கத்தான் செய்கிறது! அந்த பரிகாரத்தைத் தேட இப்போதே முற்படு! உடனே செய்!!

—ஹஸ்லித்.

காஞ்சி

மலர் 2 | 24—4—66 | இதழ் 39

போகப் போகப் புரியும்!

"இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் மறுபடியும் பெருத்த அளவில் உதவி அளிக்கத் தொடங்குமுன், அந்நாடுகளுடன், அமெரிக்காவுக்குள்ள உறவுகளை முழுமையாக அலசி, ஆராய்ந்துவிட வேண்டும் என்பது ஜனாதிபதி ஜான்சனின் கருத்தாகும்."

கடந்த ஆண்டு டிசம்பர் திங்கள், காலஞ் சென்ற இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த அமெரிக்க வெள்ளை மாளிகையிலிருந்து வெளிவந்த அறிக்கையின் ஒருசிறு துளிதான் மேலே காண்பது.

அண்மையில் தற்போதைய பிரதமர் அமெரிக்கா சென்று வந்தார். அவருக்கு முன்னதாக நமது உணவு அமைச்சர் சுப்பிரமணியம் சென்று வந்தார். இப்போது திட்ட அமைச்சர் அசோக்மேதா சென்றிருக்கிறார்.

இந்தியத் துணைக்கண்டத்துடன், தனக்குள்ள உறவு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை முழுமையாக அலசி ஆராய்ந்துவிட வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கும் — லாபநட்டக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்காவுக்குத்தான் அனைவரும் போனார்கள்—போயிருக்கிறார்கள்.

இந்தியாவின் நான்காவது திட்டத்துக்கான நிதி உதவியைக் கேட்டுப் பெறுவதற்கு என்பதன்பேரால் சிலரும், உணவு நெருக்கடியைத் தீர்த்துக்கொள்வதற்கு உணவு உதவி என்பதன்பேரால் சிலரும் போனார்கள், வந்தார்கள்!

உணவு அமைச்சர் சென்று, இத்துணைக்கண்டத்தில் அமெரிக்க உதவியுடன்—நிர்வாகத்துடன் — ஒரு உரத்தொழிற்சாலை தொடங்கும் ஒரு திட்டத்துடன் திரும்பினார்!

இதன் எதிரொலியாக ஜெய்ப்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில், அவர் பட்ட பாட்டையும் காங்கிரசின் சோஷலிசக் கொள்கை விலை பேசப்பட்ட தனிமையையும் நாடு இன்னமும் மறந்துவிடவில்லை,

இந்திராகாந்தி சென்று திரும்பியதும், பி. எல். 480 திட்டத்தின்கீழ் இந்தியா பெற்ற உணவுப் பொருள்களின் விலையான இந்திய ரூபாய்களை, — இந்நாட்டிலேயே அமெரிக்காவின் கணக்கிலே உள்ள ரொக்கத்தைப் பயன்படுத்தி—

'இந்தியா—அமெரிக்கா அற நிறுவனம்'

என்ற பேரால் புதியதொரு நிறுவனம் தொடங்க முடிவு செய்துகொண்டு வந்துள்ளார்.

இந்த ஏற்பாடு பற்றி இந்நாட்டு அரசியல் மூதறிஞர்கள் இன்னமும் கண்டனம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம், இந்த நிறுவனம் மேற்கொள்ளவிருக்கும் அறப் பணி,

இந்தியாவின் விவசாய உற்பத்தியை
நவீன முறையில் பெருக்கும் வகையில் கல்வி
போதனை தருவது

—என்று கூறப்படுகிறது.

"இந்தியா தன் திட்டங்களில் எந்த அளவுக்கு வெற்றி பெறப் போகிறது? என்பதை அமெரிக்க வல்லுநர்கள் ஐயுறுகிறார்கள்" என்று அண்மையில் ஆமதாபாதில் தூதர் பௌல்ஸ் கூறியதை நினைத்துக் கொண்டால், இச்சந்தர்ப்பத்தில் நமக்கு ஒரு ஐயம் ஏற்படுகிறது.

இந்த ஐயப்பாட்டை உறுதிப்படுத்துவது, "இந்தியா தன் விவசாயத் திட்டங்கள் முழுவதையும் சீர்திருத்துவதைப் பொறுத்தே இனி அமெரிக்க உணவு அளிப்பது பற்றிய ஒப்பந்தம் செய்யவேண்டும்" என்ற ஜான்சனின் கருத்தாகும்.

பிரதமர் இந்திரா காந்தியிடம், இந்தியத் திட்டங்களையும், சிறப்பாக விவசாயத் திட்டங்கள் பற்றியும் கலந்து பேசி, அத்திட்டங்கள் ஓட்டை உடைசல்கள், உதவாக்கரைகள் என்ற முடிவுக்கு வந்துதான், இப்போதைய அற நிறுவனத் திட்டத்தை ஜான்சன் கொடுத்திருக்கிறாரா? என்ற ஐயம் நியாயத்திற்குப் புறம்பானதாக இருக்க முடியாது.

உதவிகள் புரிவதற்கு, இந்தியத் திட்டங்கள் சீர்திருத்தப்பட வேண்டும் என்று நிபந்தனையிட்ட அமெரிக்கா, திட்டம் தந்திருக்கிறது என்றால் என்னபொருள்? தரப்பட்ட திட்டம் இந்தியக் கொள்கையின் எந்த இடத்தைத் தொட்டிருக்கிறது?

கல்வி போதனையுடன், விவசாயக் கல்
வியை இணைப்பது — அமெரிக்க நிர்வாகத்
தோடு!

'அமெரிக்க உதவியைப் பெறும் ஒரு நாடு அவ்வுதவியைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்கிறதா? என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு அமெரிக்காவுக்கு உண்டு' என்று பௌல்ஸ் கூறியிருப்பதைப் போல், இந்தத் திட்டத்தின் மூலம், தன் உதவிகள் இங்கே ஒழுங்காகப் பயன்படுத்தப் படுகிறதா? என்று கண்காணிக்கும் பொறுப்பை அது ஏற்றுக்கொண்டு விட்டது என்பதுதானே இதன் பொருள்!

விளைவுகள் யாவை? காலஞ் சென்ற ஜனாதிபதி கென்னடி அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட அமைதிப் படையின் தொண்டர்களில் சுமார் 1000 பேர் வரை இந்நாட்டில் இப்போது இருக்கிறார்கள். 46 நாடுகளுக்கு

அமெரிக்கா அனுப்பியுள்ள தொண்டர்களின் எண்ணிக்கை ஒரு நாட்டுக்கு 300-க்கு மேற்படாத நிலையில், இந்தியாவுக்கு மட்டும் 1000 பேர் என்ருல்—இந்தியா எந்த நிலையில் இருந்துகொண்டிருக்கிறது? இன்னும் அதிக தொண்டர்கள் அண்மையில் வரப்போகிருர்களாம்! இது 3000 வரையும் உயரக்கூடும் என்கிருர்கள். அப்படியென்ருல் இந்தியா எந்த திசையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

சோஷலிசப் பாதையில் அடிவைத்து விட்டோம்; நாங்களே அதன் பிதாவாக இருந்து செயல்படுத்துவோம்! 'சோஷலிசம்' என்பதன் பொருள் எங்களுக்கு மட்டுமே தெரியும்! என்று வீராப்புப் பேசி வருபவர்கள் இதற்கென்ன பதில் சொல்வார்கள்.

தானமாகக் கொடுக்கப்பட்டது 'பசுதான்' என்று திட்டவட்டமாகத் தெரிந்தால், அதன் பல்லைப் பிடித்துப் பதம் பார்க்கத் தேவை இல்லைதான்! 'பசுத் தோல் போர்த்தப்பட்ட புலி' என்ற ஐயத்தை, தானம் கொடுத்தவர்களே ஏற்படுத்திவிட்டிருக்கிறபோது, பதம் பார்க்காமல் எப்படி இருப்பது?

இந்தியா மீது அரசியல் நெருக்கடியைத் திணிக்க விரும்பாதது அமெரிக்கா, என்று சொல்லிக்கொள்ளும் அந்நாடு, இத்தகையத் திட்டங்களைத் தருகிறது என்ருல் உள்நோக்கத்தில் ஐயம் ஏற்படுவது இயற்கைதான்.

இந்திய சிந்தாந்தக் கொள்கைகள் என்று கூறப்பட்ட சில இலட்சியக் கோட்பாடுகளின் காரணமாக அமெரிக்க முதலாளிகள், இத்துணைக் கண்டத்தில் தொழில்களின் மீது மூலதனம் இட்டு, தொழில் தொடங்கத் தயங்கி வந்திருக்கிருர்கள்.

பிரதமரின் அமெரிக்க விஜயத்தில், இனி அத்தகையக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்' என்று பேசப் பட்டிருக்கிறது என்ருல், அரசியல் திணிப்பில்லை என்று யாரால் கூற முடியும்!

விவசாயக் கல்வியை அமெரிக்கா தர முன்வருகிறது என்கிறபோது, இந்நாட்டு விவசாயத் திட்டம் தகுதியற்றது என்பதை உலகுக்கு அது உணர்த்துகிறது என்பதுதான் பொருள்.

தவறுகள் எங்கிருந்தாலும், யாரால் சுட்டிக்காட்டப்பட்டாலும் ஏற்றுக்கொண்டு திருந்துவது என்பது மனிதவர்க்கத்துக்கு வகுக்கப்பட்ட பொது இலக்கணங்களில் ஒன்று.

இந்த அடிப்படையில், நம் தவற்றை அமெரிக்கா சுட்டிக்காட்டியிருந்தால், ஒப்புக்கொள்ள முடியும்; திருத்திக்கொள்வதும் சரியாகும்.

ஆனல், 'அமெரிக்காவில் சுமார் 10 சதவீத மக்களே விவசாயம் செய்கிருர்கள்; அது ஒரு தொழில் நாடுதான்; அதன் விவசாயத் திட்டம், எல்லா நாடுகளுக்கும் பொருந்தும் என்று சொல்லிவிட முடியாது' என்று தூதர் பௌல்ஸ் தனது ஒரு நூலில் குறிப்பிட்டிருக்கிருர்.

'தங்கள் நாட்டுத் திட்டம், எல்லா நாடுகளுக்கும் பொருந்ாது என்று அமெரிக்க ராஜதந்திரி ஒருவரே ஒப்புக்கொண்டுள்ள ஒரு திட்டத்தை, கல்வி முறையில் இங்கே போதிக்க வருகிருர்கள் என்பதை இந்தியா மறுக்கிறதா என்ன?

குறிப்பிடப்படும் ஒரு திட்டத்தின் மூலம் அவர்கள் போதிக்க விரும்புவது 'கடின உழைப்பு'தான் என்பதை இலைமறைவு காய்மறைவாகச் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. இதனைப்போதிக்க ஒரு நிறுவனம் தேவையா இங்கே!

காங்கிரஸ்காரர்கள், பாலாறும் தேன்மழையும் ஓடச் செய்யப்போவதாகக் கூறி அரசுக் கட்டிலில் ஏறிய நாள்முதல், இந்நாட்டு மக்கள் சுபிட்சம் நிறைந்த வாழ்க்கையா வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள்?

பாலோடும், பாகோடும், நெய்யோடும், பருப்போடும் சாப்பிட்டுவிட்டு, திண்டுகளில் படுத்துப் புரண்டுகொண்டா இருக்கிருர்கள் இந்நாட்டு மக்கள்?

அடிமையாய் வாழ்ந்த அந்தநாள் முதல்-'மன்னர்'களாகிவிட்ட இந்தநாள் வரையில் அவர்கள் அரை வயிற்று உணவுக்கு எவ்வளவு கடின உழைப்பு நல்க வேண்டி இருக்கிறது—நாளைக்கு சுபிட்சம் கிடைக்கும் என்ற வெறும் நைப்பாசையால்! வெறும் நம்பிக்கை ஒன்றினலேயே உயிரை ஒட்டவைத்துக்கொண்டிருப்பவர்களாய் ஆகிவிட்டார்களே இந்நாட்டு ஏழைகள்—பாட்டாளிகள்!

இந்நிலையில் 'கடும் உழைப்பு' என்பதை அமெரிக்கர்கள் சொல்லித்தான் இனி இந்நாட்டவர் அறிந்து கொள்ளப் போகிருர்களா என்ன?

உதவி என்பது, கைம்மாறு கருதாதது என்று கூறப்படும். அமெரிக்கா கைம்மாறு எதிர்பார்க்கட்டும்; 'புசிக்கக் கொடுத்தேன் — போடு' என்ற ரீதியில்! ஆனல் இந்நாட்டுச் சுதந்திரத்தையே அல்லவா விலையாகக் கேட்கத் தொடங்கிவிட்டது!

'அந்நிய உதவிகள் எதிலும் சுயநல நோக்கம் இல்லாமலில்லை' என்று காமராசரே கூறியிருக்கிருர்.

எனவே, இந்திய அரசு, அமெரிக்க உதவியைப் பெறுவதிலும், அந்த உதவியைப் பயன்படுத்திக் கொள்ளத் தரும் திட்டங்களை ஏற்பதிலும் முழுக் கவனமும், திறமையும் அரசியல் தெளிவும் காட்டவேண்டிய வேளை வந்திருக்கிறது.

அமெரிக்காவின் அப்போதைய வெளியீட்டைச் சுட்டிக் காட்டி, இந்தியாவைச் சிந்திக்கச் சொன்னேம்; இப்போதும் சொல்கிறேம். அமெரிக்கா முன்பு சொன்னதை, இப்போது செயல்படுத்துகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்த செயல் திட்டம் நமக்கு ஏற்றதா? என்பதைத் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் உணர்ந்து, உணர்த்தவேண்டியது இந்திய அரசின் அவசர, அவசியமான கடமையாகும்.

சந்தர்ப்பச் சூழ்நிலைகள் காரணமாக ஏற்பட்ட ஒரு நெருக்கடியைத் தீர்த்துக் கொள்வதற்காக அடிப்படை இலட்சியங்களே விலை கூறப்படுவதென்ருல், அந்த இலட்சியங்கள் மீது அல்ல, அதனைச் செயல்படுத்துபவர்கள்மீது நமக்கு மட்டுமல்ல, பொதுமக்களுக்குக்கூட ஒரு ஐயம் ஏற்படத்தான் செய்யும்.

இத்தகைய நடைமுறைகளினல், இனி சோஷலிசத் தத்துவத்தின் தந்தையர்கள் — காங்கிரஸ்காரர்களா? அல்லவா என்பது போகப் போகப் புரிந்துவிடும்! புரியத்தான் போகிறது!!

தம்பி

கணக்குத் தீர்க்கும் காலம்!

தேர்தல் நெருங்க நெருங்க காங்கிரஸ் தலைவர் காமராஜரின் கோபம் வளர்ந்து வருகிறது, வார்த்தைகளிலே கடுமையும் தொனியிலே மிரட்டலும் மிகுதியாகிறது. சில ஆண்டுகளாகவே அவரிடம் தொத்திக்கொண்டுவிட்ட 'எல்லாம் நானே!' என்ற போக்கு இப்போது உச்சக்கட்டம் சென்றிருக்கிறது. எனக்கு அதிலே ஒருவிதமான மகிழ்ச்சி, ஏனென்ருல, இதற்குமேல் போவதற்கு இல்லை! ஆகவே கீழே சரிந்தாகவேண்டு! அவர் அல்ல! அவருடைய போக்கிலே காணப்படும் முடுககு!

'கோபம் பலவீனத்தின் அறிகுறி' என்று காந்தியார் கூறினுர். அவர்தான் போய் விட்டாரே, இனி அவர் 'உபதேசம்'பற்றியா கவலைப்படப் போகிருர்கள் — அவர் பெயர் கூறிப் பெரியவர்களாகிவிட்டவர்கள்.

> அவருக்குச் சிலைகள் அமைத்திருக்கிருேம். அவர் பெயரில் நகர்கள், நெடுஞ்சாலைகள், பூங்காக்கள், பவனங்கள், கவ்விக்கூடங்கள் பிரார்த்தனை மண்டபங்கள் அமைத்திருக்கிருேம். போதாதா எமக்குள்ள பக்தியைக்காட்ட என்று கேட்பாகள் அவர் 'பேச்சை'த் துச்சமென்று தள்ளிவிட்ட தூயவர்கள்.

கோபம், பலக்குறைவின் அறிகுறி என்பதனை எவரும் மறுப்பதில்லை; மறுப்பதற்கில்லை. கோபம, அடககமுடியாத ஆசையை நிறைவேற்றிக்கொள்வதிலே தடை ஏற்பட்டுவிடும்போது பனமடங்கு அதிகமாகிவிடுகிறது. காமராஜர் அந்த நிலையால் நெளிகிருர்; ஆகவேதான் அத்தனை ஆததிரத்தைக் கொட்டிக்கொண்டிருக்கிருர்.

அதிலும், மிகவும் வேண்டியவர்கள், தனககுக் கட்டுப்பட்டவர்கள், தம்மால் உயர்நிலை பெசனறவர்கள், தன பேச்சைத் தட்டி நடப்பது மட்டுமல்ல தன் பேச்சு, பொருளறறது, பயனற்றது, பொருட்படுத்ததககதல்ல என்று வெளிப்படையாகவே கூறடுவலதக கேட்குமபோது, அவருக்கு—பெரியவருக்கு! — கோபம கோபமாகததானே வரும அந்தக கோபததை யார்மீது காட்டுவது! எதிரககட்சிகள் மீது!! காட்டுகிருர்!!

> அமெரிக்காவின் உதவியைப் பெறுவதற்காக, அந்த நாட்டு ஆடசியாளர்கள நீட்டிடும் காகிதத்தில் காட்டிடும இடததில கையெழுததருவது, அடிமை முறிசசீட்டிலே கையொப்பமிடுவதற்கு ஒப்பாகும.

பலா இந்தக கருததினைக் கூறினர்; கூறி வருகினறனர். பேரரசினை நடத்திச் செல்பவர்கள தந்திடும சமாதானம, விளககம், வாதததிறமைக்கு எடுததுககாட்டாக அமைகிறது! ஏறபட்டுவிடட அய்யப்பாட்டை நீக்குவதாக இலலை.

> அய்யபபாடும் அருவருப்பும கொணடுள்ளவர்களில் பெரியவரும் ஒருவர்.
>
> உரத்தொழிற்சாலை சம்பந்தமாக அமெரிககாவிடம் இந்தியப் பேரரசு செய்துகொணடுளள ஒபபநதம, அக்ரமமானது, அந்து



யானது, சோஷலிசக் கொள்கைக்கு ஊறு தேடுவது என்பது காமராஜரின் கருத்து.

இந்தக் கருத்தினை அவர் ஜெய்ப்பூரில் வெளியிட்டார்.

கை தட்டினர்; வரவேற்றனர்; யார் தவறான வழி சென்றாலும், பெரியவர் தடுத்து நிறுத்துவார் என்று பாராட்டினர்.

இந்திராகாந்தி அம்மையார் அமெரிக்கா சென்றார்களல்லவா—வசந்தம் கண்டேன்! என்று மகிழ்ந்து அறிவித்தார்களே!! — அப்போது, கேட்டார்கள் அவர்களை காமராஜரின் கருத்துபற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள் என்று.

அவர் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை

என்று அம்மையார், சுருக்கமாக, ஆனால் சுரீல் என்று படும்படி, பதில் கொடுத்தார்கள்!

கேள்வியை எழுப்பியவர்கள் அந்தப் பதிலைக் கேட்டபோது, எந்தவிதமான 'தோற்றம்' காட்டினரோ தெரியவில்லை; ஆனால் எளிதிலே புரிந்துகொள்ளலாமே!!

என்ன இருந்தாலும் இப்படிக் குட்டி இருக்கக்கூடாது.

என் தலைவர்! என் வழிகாட்டி! என்று இங்கே 'பஜனை' செய்வது; அங்கே போய அவர் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அத்தனை அலட்சியமாகச் சொல்லுவது! இதுவா தலைவரிடம் கொண்டுள்ள 'மதிப்பு'க்கு அடையாளம்!

என்ன எண்ணிக்கொள்வார்கள் அமெரிக்கர்கள் தலைவரைப்பற்றி! அவர் எதையோ பேசுவார்! ஆனால் அவர் பேச்சை ஆட்சி நடாத்தும் அம்மையார் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்! அவ்வளவுதான் அவருக்கு உள்ள 'பிடி'யின் இலட்சணம்! என்றெல்லாம் கேலி பேசமாட்டார்களா!

பச்சையாகச் சொல்வதானால், தலைவரின் முகத்தில் கரி பூசிவிட்டார் என்றுதான் தெரிகிறது!

காட்டிக் கொடுத்துவிட்டார் என்று சொல்லவேண்டும்.

இவ்விதமெல்லாம் பேசிக் கவலைப்பட்டிருப்பர் 'துதி பாடகர்கள்'.

அவருக்கு மட்டும் என்ன மனதிலே கோபம் எழாமலா இருந்திருக்கும். கொட்டிக் காட்ட 'இடம் பார்த்தபடி இருந்திருக்கிறார்; எதிர்க்கட்சி மீது கொட்டுகிறார்.

எதிர்க் கட்சிகள்மீது பாயும்போது காட்டும் 'ரோஷ' உணர்ச்சியிலே நூற்றிலே ஒரு பங்கு பயன்படுத்தியாவது, அம்மையாரைப் பார்த்து, மரியாதையாக ஆனால் உறுதியாகக் கூறியிருக்க வேண்டாமா, காமராஜர்.

தாங்கள் அமெரிக்காவில் என் கருத்தைப் பற்றி அவ்வளவு அலட்சியமாகப் பேசி இருந்திருக்கக் கூடாது என்று,

கூறினாரா! இல்லை! ஏன்? அம்மையார் மேலும் என்னென்ன சொல்லிவிடுவார்களோ என்ற அச்சந்தான்! வேறென்ன?

எரிச்சலை அடக்கிக்கொண்டார்; மனம் குமுறியபடி இருந்தது.

'பஞ்சாபி சுபா'—'வங்காளக் கலவரம்' போன்ற மிக முக்கியமான நிகழ்ச்சிகளை ஒட்டி அம்மையார் முடிவுகளெடுத்தபோது பெரியவர் நெடுந்தொலைவிலே நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டார்! மனம் படாதபாடு பட்டிருக்கத் தானே செய்யும்!!

பஞ்சாபி சுபா அமைக்கும் காலம் வரையில், பஞ்சாபில், குடிஅரசுத் தலைவரின் ஆட்சி ஏற்படுத்தப்படுவதைத்தான் விரும்புகிறேன்; என் சொந்தக் கருத்து அதுதான் என்று காமராஜர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அம்மையாரும் உடனுள்ள அமைச்சர்களும் கூடி பஞ்சாபில் இப்போதுள்ள 'மந்திரி சபை'யே நீடிக்கட்டும்; குடி அரசுத் தலைவரின் நேரடி ஆட்சி வேண்டாம் என்று முடிவு செய்து அறிவித்து விட்டனர்.

இவ்விதம் தொடர்ந்து குட்டுகள்; குடைச்சல்கள்! அதன் பயனாக ஏற்பட்ட மனக் குமுறல், காமராஜரை எதிர்க்கட்சிகள் மீது பாயச் செய்கிறது.

பட்டாளம் வந்துவிடும் என்று பயம் காட்டினார்!

அவருடைய இந்தப் பேச்சை, கவனிக்கத் தக்கதாகக் கூட அம்மையாரும் மற்ற அமைச்சர்களும் கருத மறுத்துவிட்டனர். எதையாவது பேசிக்கொண்டிருப்பார்; பேசிக்கொண்டிருக்கட்டும் என்று இருந்துவிட்டனர்.

இந்த அளவு அலட்சியப்படுத்தி இருந்திருக்க வேண்டியதில்லை என்று பலரும் பரிதாபப்படத்தக்க முறையிலே பிரதம மந்திரியார் நடந்துகொண்டார்!

காமராஜரின் 'பட்டாள'ப் பேச்சை அறிவாளர்கள் பலமாகக் கண்டிக்கலாயினர்; இதழ்கள் கண்டித்தன! கோபம் கிளம்பி இருக்கவேண்டுமே! காணோம்! ஏன்? கண்டனத்துக்கு மறுப்புக் கூறக் கிளம்பி, மேலும் எதை எதை வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டிவந்துவிடுமோ என்ற அச்சம்! அந்தப் பேச்சை அந்த அளவோடு விட்டுவிட்டார்!!

பேசாமலும் இருக்க முடியவில்லை.

பேசினாலும் மாட்டிக்கொள்ள வேண்டி வந்துவிடுகிறது!

'ஆகட்டும் பார்க்கலாம்' என்ற பாணியோடு நின்றிருக்க வேண்டும்!

மேலால் சென்றதுதான் இத்தனை சங்கடத்துக்கும் காரணம.

என்றெல்லாம் அவர் எண்ணிக்கொண்டிருந்திருப்பார்; எடுபிடிகள் விடுமா! எமது தலைவர் ஏன அவ்விதம் சொன்னார் என்றால் என்று துவங்கி ஏழும் ஏழும் பத்தடா! இதை இலலை என்பான் யாரடா!! என்று பாடிடும் பாணியிலே பேசிடக் கேட்கிறோம். அவர் ஒருமுறை பேசியதுடன் நிறுத்திக் கொணடுவிட்டார்.

இப்போது மற்றோர் 'கரடி'யை ஓட்டி வந்து காட்டுகிறார்.

வெளிநாடுகள் பணம் தருகின்றனவாம், இங்குள்ள எதிர்க் கட்சிகள் சிலவற்றுக்கு. எதிர்க் கட்சி

கள் சில தேர்தலிலே செலவிடும் பணத்தின் அளவைப் பார்க்கும்போது, தனக்கு அவ்விதம் தோன்றுகிறதாம்!

இவ்விதம் கூறியதும் நாட்டு மக்கள் பதை பதைத்து, துடிதுடித்து, கொதித்தெழுந்து எதிர்க் கட்சிகளைச் சாடுவர் என்று பெரியவர் எண்ணிக் கொண்டு இந்தக் 'கரடி'யை ஓட்டிக் காட்டுகிறார்.

விவரமறிந்தவர்கள் கைகொட்டிச் சிரிக்கிறார்கள்! இது எத்தகைய விந்தையான அரசு! துப்பறியும் இலாகாவும் போலீசும், சுங்கத் துறையும் வெளிநாட்டுத் தூதரகங்களும், கொள்ளை கொள்ளையாகப் பணத்தை மென்று தின்றுகொண்டிருக்க, அத்தனை வளையங்களையும் மீறி வெளிநாட்டுப் பணம் இங்கே வந்திட எப்படி முடிந்தது! இவ்வளவுதானா இந்த அரசுக்கு உள்ள திறமை! கையும் பிடியுமாகப் பிடித்துக் காட்ட வல்லமையற்று, வக்கற்று, வழியற்று இருந்திடலாமா! பணம் அனுப்பும் வெளிநாடுகள் யாவை? எந்தக் கட்சிகளுக்குத் தருகின்றன? ஏன்? என்ற விவரத்தைக் கண்டறிந்து, குற்றவாளிகளை அம்பலப் படுத்தாமல், பொறுப்பிலே உள்ளவர்கள் இப்படியா பேசுவது; மூன்று முழ நீளமுள்ள குதிரைக் கொம்பை ஆறு பொதி அளவுள்ள அத்திமலர் கொடுத்து வாங்கினேன் என்ற முறையிலா பேசுவது!

வெளிநாடுகள் பணம் தருவது, குற்றம்!
மன்னிக்கப்படமுடியாத குற்றம்.

வெளிநாடுகளிடம் கட்சிகள் பணம் வாங்குவது மாபெருங் குற்றம்; தேசத்துரோகக் குற்றம்.

அப்படி சில கட்சிகளுக்கு வெளிநாடுகள் பணம் கொடுக்கின்றன என்று தோன்றுகிறது என்று பேசிவிட்டு, அதைக் கண்டுபிடிக்காமல் இருப்பது, பொறுப்புள்ள சர்க்காராக இருக்க முடியாது.

அத்தகையபோக்கிலே ஒரு சர்க்கார் இருப்பது அந்த நாட்டுக்கே அவமானம்!

இது வெறும் தேர்தல் தந்திரப்பேச்சுதானே!! என்று இடித்துக் கேட்கிறது மெயில் இதழ்.

தெளிவும் துணிவும், திறமையும் பொறுப்பும் வல்லமையும் பண்பும் இருப்பது உண்மையானால் எந்தெந்த வெளிநாடுகள் எந்தெந்தக் கட்சிகளுக்குத் தேர்தல் செலவுக்காகப் பணம் தந்துள்ளன என்ற விவரத்தைக் காமராஜர் வெளியிடவேண்டும்; தயக்கமின்றி; அச்சமின்றி; வெளியிடுவாரா!!

வெளிநாடுகள் பணம் தருவதாகத் தோன்றுகிறது; ஆனால் விவரம் தெரியவில்லை, கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறுவதாயின், இத்தனைப் பெரிய இடத்தில் இருந்துகொண்டு விவரமறியாமல், விளக்க முடியாமல் பேசுவது கேட்டு அறிவாளர் கைகொட்டிச் சிரிப்பார்கள்! வெளிநாடுகளும் இந்த அரசுபற்றியும் நடத்திடும் தலைவர்கள்பற்றியும் மிகக் கேவலமாகக் கருதிக்கொள்வார்கள்.

ஏன் அதுபோலப் பேசினார் காமராஜர்? தேர்தலைப் பற்றிய திகில்! என்ன நேரிட்டுவிடுமோ என்ற அச்சம்! கணக்குக்கேட்கும் காலம் வருகிறதே என்ற கலக்கம்,

கோடிகோடியாகப் பணத்தைக் கொட்டிக் குவித்தாலும், ஏமாற்றப்பட்டுப்போயுள்ள மக்களின் மனக் கொதிப்பை அடியோடு போக்கிவிடமுடியாது! அவர்கள் தமக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகளுக்காகப் பழிதீர்த்துக்கொள்ளக் கிளம்புவதைத் தடுத்துவிட முடியாது என்று காமராஜர் உணருகிறார்.

காங்கிரசுக் கட்சியில் உள்ள பணக்காரர்களை எண்ணிப் பார்த்திடும்போது, ஒருவிதமான தைரியம் வருகிறது. என்றாலும் எந்தப் பக்கம் திரும்பினாலும், வரண்ட தலையினர், இருண்ட கண்ணினர், கூனிக் கிடப்போர், குமுறிக்கிடப்போர், கொத்தடிமை செய்தும் வாழ்க்கை பொத்தல் இலைபோன்றுகிடக்கண்டு வதைபடுவோர், இல்லாமை கொட்டுவதால் துடிதுடித்துக்கிடப்போர், என்போர்களே தெரிகின்றனர். அவர்களின் கண்கள் கேள்விக்குறிகளாகிவிட்டிருப்பதையும் காண்கிறார்! இந்தப் புயலைச் சமாளிக்கப் பணத்தால் ஆகுமா என்று எண்ணுகிறார்; திகைக்கிறார்.

காங்கிரசுக் கட்சியை எதிர்க்க முனையும் கட்சிகளைக் காட்டுப்போக்கில் தாக்கிப்பேசினால் அச்சத்தால் அடங்கி ஒடுங்கிப் போவார்களா என்று பார்க்கிறார்; பலிக்காததுகண்டு பதைக்கிறார்.

ஒரே ஒரு தைரியம் அவருக்கு! காங்கிரசுக்கு எதிர்ப்பு நிரம்ப இருக்கிறது; பல முனைகளிலிருந்து, பல்வேறு முகாம்களிலிருந்து!

ஒருகணம் மிரட்சி ஏற்படுகிறது, இத்தனை முகாம்களிலிருந்தா எதிர்ப்பு என்று! மறுகணமோ மகிழ்ச்சி

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M.அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு. திண்டுக்கல்

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்ப்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'
மற்றும்
'மதுகாசவம்'

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

இந்தவாரம் இந்த நாட்டில்...

ஹனுமான் கஞ்ச், ஏப். 15—பாதுகாப்பு விதிகளைத் தொடர்ந்து நீடிக்கச் செய்தால், அது ஜனநாயகத்தையே அழிக்கும் ஆயுதமாகிவிடும் என்றார் செயப்பிரகாசர்.

புதுடில்லி, ஏப். 15—உணவுத்தானியங்கள் வழங்கு முறையில் உள்ள எல்லா கட்டுப்பாடுகளையும் விரைவில் நீக்கவேண்டும் என்ற யோசனையை எஸ். கே. பாட்டில் ஆதரித்தார்.

புதுடில்லி, ஏப். 15— இந்தியா-அமெரிக்கா ஒப்பந்தப்படி இந்தியாவில் ஒரு விவசாய - கல்வி நிலையமொன்றை ஏற்படுத்தல் என்ற திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டது.

சென்னை, ஏப். 17—ஜூன் திங்கள் முதல் மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க விருப்பதன் எதிரொலியாக. தற்போதைய ஊழியர்களில் 1965 அக்டோபருக்குப் பின்னர் நியமனம் பெற்ற ஊழியர்களில் ஏழரை சதவீதம் பேர் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. இதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கப் பட்டு விட்டனவாம்!

புதுடில்லி, ஏப். 18— சீனாவில், துணிக்கு மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும், 3 முழ அளவில் கிடைக்கும் அளவுக்கு அபாய நிலை ஏற்பட்டுள்ளதெனவும் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக டாக்டர்லோகியா மக்கள் அவையில் அறிவித்து. இது தொடர்பான விவரம் தனக்குத் தரப்பட வேண்டும்' என்றார்.

பாட்னா, ஏப். 19—கட்சிக்குள்ளேயே வகுப்பு வாத அடிப்படையில் முன்னணி அமைத்துக் கொண்டு செயல்படும் காங்கிரஸ்காரர்களை, தேர்தலின்போது வேட்பாளர்கள் பொறுக்கும் சமயத்தில் கவனித்துக் கொள்ளப்படும் என்றார் மத்திய அமைச்சர் பக்ருதீன் அகமத்.

புதுடில்லி, ஏப். 18— சென்ற ஆண்டு தென்னகத்தில் நிகழ்ந்த இந்தி எதிர்ப்பு உணர்வு காரணமாக, அலுவல்களில் இந்தியைத் துரிதமாகப் பயன்படுத்தும் நிலை, தடங்கல்பட்டது எனவும், இவ்வாண்டு துரித வளர்ச்சிக்கு வழி காணப்படும் என்றும் மத்திய அரசின் ஒரு குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

புதுடில்லி, ஏப். 18— தாஷ்கண்ட் ஒப்பந்தங்களை பாக். மீறுவது தொடர்பாகப் பேச்சு நடத்த ரஷ்யா, ஒரு தூதரை அனுப்பியுள்ளது என்று கடந்த கிழமை மக்களவையில் தான் கூறியது சரியான தகவலல்ல என்று, இப்போது இந்திரா காந்தியே ஒப்புக்கொண்டார்.

புதுடில்லி, ஏப். 20— பஞ்சாபி சுபா, ஹரியானு ஆகிய மாநிலங்கள் அக்டோபர் 1-ல் ஏற்படுத்தப்பட்டு விடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லி, ஏப். 20—யு. எஸ். உடன் உர பேரம் பற்றிய இந்திய அரசின் முடிவு நாட்டு நலனை எவ்விதத்திலும் பாதிக்காது என்றார் இந்தியப் பிரதமர்.

துளிர்க்கிறது, பலமான எதிர்ப்புதான், ஆனால் பல முகாம்கள்!! ஒரே அணியில் இல்லை! பல அணிகள்! பல்வேறு போர்முறைகள்!! எனவே பிழைத்துக்கொள்ளலாம் என்ற தைரியம் பிறக்கிறது.

நாட்டுக்கு விடுதலை கிடைத்திடவேண்டும் என்ற ஒரே நோக்கத்தின் அடிப்படையில் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய காரணத்தால் இந்தியா முழுவதற்குமாக காங்கிரஸ் எனும் அமைப்பு பரவி வளர்ந்திட முடிந்தது.

இன்று வளர்ந்துள்ள எதிர்ப்புகள் அதுபோல ஒரே முகாமாக வடிவம்கொள்வது எளிதான காரியமல்ல.

எனவே, இந்த முகாம்களுக்குள் மோதுதலை மூட்டிவிட்டால், மூலபலம் முறிந்துவிடும் என்பது காமராஜரின் கணக்கு!

ஆனால் நாடு இன்று பூண்டுள்ள போர்க்கோலத்தைப் பார்க்கும்போது இந்தக் கணக்கும் பொய்த்துப் போய்விடும் என்றே தோன்றுகிறது.

காங்கிரசுக்கு எதிர்ப்பாகஉள்ள கட்சிகள் பல; அவைகளிலே ஒன்றை ஒன்று பகைத்துக்கொள்ளும நிலையும் இருந்திடக் காண்கிறோம்.

ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு இயல்பு, திறமை, வரலாறு, வாய்ப்பு, வலிவு, கொள்கை, திட்டம், இருந்திடக் காண்கிறோம்.

ஆனால் இவை யாவும், தனித்தனியாகத் தத்தமது கொள்கைகளை எடுத்துக்கூறிடுவதுடன், காங்கிரசின் எதேச்சாதிகாரப் போக்கைக் கண்டிப்பதிலும், காங்கிரசு ஆட்சி நீக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவதிலும், நிற்கின்றன.

மொத்தத்தில் நாட்டு மக்களிடம் காங்கிரசாட்சிக்கு எதிர்ப்பான உணர்ச்சி பெரிய அளவிலே கொழுந்துவிட்டு எரிகிறது

எல்லா எதிர்க்கட்சிகளும், எடுத்துக் கூறுவதிலிருந்து, காங்கிரசாட்சி மாற்றப்பட்டாகவேண்டும் என்ற எழுச்சியை மக்கள் பெறுகிறார்கள்; முதலில்! பெறுவதால் காங்கிரஸ் கட்சிக்கு இம்முறை 'ஓட்டு' அளிக்கக் கூடாது என்ற உறுதி பெறுகிறார்கள்.

இந்த உறுதி பெற்ற பிறகு காங்கிரசை வீழ்த்த, இன்றுள்ள எதிர்க்கட்சிகளில், எதற்கு வலிவும் வாய்ப்பும் போதுமான அளவு இருக்கிறது என்ற எண்ணம் பிறக்கிறது.

அத்தகைய வலிவும் வாய்ப்பும் உள்ள கட்சி எது என்று கண்டறிந்ததும், அந்தக் கட்சியிடம், தமக்கு நலன் தரத்தக்க கொள்கையும் திட்டமும் இருக்கிறதா என்று பார்த்திட முனைவர். அதிலே பொதுமககள் மனதிற்கு நிறைவு ஏற்படின் அந்தக் கட்சியினை ஆதரிப்பர்.

தம்பி! இந்த முறையில் பொதுமக்கள் நமக்குத் தந்த வாக்குகளின் எண்ணிக்கைதான், சென்ற தேர்தலின்போது 34 இலட்சம்.

சென்ற தேர்தலின்போது இருந்தது போலவே இப்போதும் காங்கிரசை எதிர்க்கும் கட்சிகள் பல முகாம்களாக உள்ளன என்ற போதிலும்,

சென்ற தேர்தலைவிட இம்முறை, கட்சிகளுக்குள் 'உடன்பாடு' பெருமளவு ஏற்பட்

டுத் தீரும் என்பதற்கான அறிகுறிகள் பளிச்சிட்டுக் கொண்டுள்ளன.

வலதுசாரிகள் நம்மோடு 'ஒட்டுஉறவு' கொள்ளப்போவதில்லையாமே, அண்ணா! அப்படி இருக்க கட்சிகளுக்குள் உடன்பாடு இம்முறை சென்ற முறையைவிட அதிக அளவிலே இருக்கும் என்று எப்படிக் கூறலாம் என்று கேட்கிறாயா, தம்பி! காரணத்தோடுதான் கூறுகிறேன்.

வலது சாரிகள் நம்மோடுதான் உடன்பாடு செய்துகொள்ள மறுக்கிறார்கள். ஆனால் அவர்களும் 'உடன்பாடு' தேவை என்பதை உணர்ந்து, இடது சாரிகள், சோஷியலிஸ்டுகள், தமிழரசுக் கழகம் ஆகிய அமைப்புகளுடன் கலந்து பேச விழைகிறார்கள்.

நான் இந்த 'விழைவை' வரவேற்கிறேன். பத்துப் பதினைந்து முகாம்கள், ஒரே முகாமாக அமையா விட்டாலும் பத்துப பதினைந்தாகவே இருக்கப் போவதில்லையல்லவா, மூன்று அல்லது நான்கு முகாம்களாகும் போலத் தோன்றுகிறது.

அந்த அளவுக்கு நிலைமை உருவெடுத்தால் கூட வரவேற்கத் தக்கதுதான்.

எடுக்கப்பட்டுள்ள முடிவு, இறுதி முடிவு என்று நான் கருதவில்லை.

ஆந்திர வலது சாரித் தலைவர், எவருடன் கூடியேனும் காங்கிரசை வீழ்த்தவேண்டும் என்ற கருத்துன் இருப்பதாக இதழில் கண்டேன்.

இந்த எண்ணம் வளர்ந்து, இன்றைய முடிவு மறுவடிவம் கொள்ளக் கூடும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

சென்றதேர்தலின்போது, சுதந்திரக்கட்சியுடன் உடன்பாடு செய்து கொள்வது, தமது தூய்மையைக் கெடுத்துவிடும் என்று பேசிவந்த கம்யூனிஸ்டு நண்பரொருவர், தேர்தல் நெருங்க நெருங்க, மாநிலமட்டத்திலிருந்து மாவட்ட மட்டத்திற்கு வந்து, அதிலிருந்து கடைசியில் 'தொகுதி' மட்டத்துக்கு வந்தார். நினைவில் இருக்கிறது! நிலைமையை உணர உணர, முடிவுகள் திருத்தி அமைக்கப்படும்.

சுதந்திரக் கட்சியுடன் 'உடன்பாடு' செய்து கொள்ள முடியாது—அவர்களை ஆதரிக்க முடியாது—என்று திட்ட வட்டமாகத் தெரிவித்துவிட்ட கம்யூனிஸ்டுகள்—சுதந்திரக் கட்சியுடன் 'உடன்பாடு' செய்து கொண்ட 'பார்வார்டு பிளாக்குடன்' 'உடன்பாடு' செய்துகொண்டு, ஒத்துழைப்பு நல்கினர். நல்லவர்கள் தம்பி! அவர்கள்! அவர்கள் அவ்வப்போது எடுக்கும் முடிவுதான் இறுதிமுடிவுஎன்று எண்ணிக்கொள்ளாதே; மாற்றிக்கொள்ளத் தயக்கம் காட்டமாட்டார்கள்!

இதழில் பார்க்கிறேன், சோவியத் ரஷியாவில் கம்யூனிஸ்டு கட்சி பற்றிய ஒரு செய்தியை.

மே தினம் வருகிறதல்லவா, தம்பி! அன்று உலக நாடுகள் பலவற்றுக்கும் வாழ்த்து வழங்க, எந்த முறையில், எந்த வடிவததில், எந்தக் காரணம் காட்டி வாழ்த்து வழங்குவது என்பது பற்றி சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டி கூடி 111 வாழ்த்தோவியங்களைத் தீட்டிற்றும்.

இந்த வாரம் வெளிநாட்டில்...

ஐ. நா. ஏப். 15—கோதுமையிலிருந்து அரிசி தயாரிக்கும் முறையொன்றை அமெரிக்க விவசாய இலாகா கண்டுபிடித்துள்ளது. அரிசியின் பயன்கள் என்னென்னவோ, அவ்வளவும் இதற்கும் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பேருத், ஏப். 17—இராக்கின் ஜனாதிபதியாக, தற்போதைய ராணுவ அலுவலகத்தின் தற்காலிக தலைவர் மேஜர் ஜெனரல் அப்துல் ரகிமான் ஆரிப் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் இவர் விபத்தில் மாண்ட பழைய அதிபரின் சகோதரர் ஆவார்,

சிங்கப்பூர் ஏப் 18 — இந்தோனேஷிய அரசின் தற்போதைய போக்கு காரணமாக சீன - இந்தோனேஷிய உறவுகள் முறியலாமெனவும், பெரும்பான்மையான சீனர்கள் வெளியேறக் கூடும் என்றும் தெரிகிறது.

வாஷிங்டன், ஏப். 17—சீனவுடன். யு எஸ். நல்லுறவுடன் இருக்கவே விரும்புகிறது: ஆனால் தூரக் கிழக்கில் சீனாவின் ஆக்கிரமிப்புப் போர்களை அமெரிக்கா அனுமதிக்காது என்றார் வெளி விவகார அமைச்சர் டீன்ரஸ்க்.

பாங்காக், ஏப். 18-இவான்ஸ்மித்தின் ரொடீஷியாவுடன் தனது வர்த்தக உறவைத் துண்டித்துக் கொள்ள முடிவு செய்துவிட்டதாக பாங்காக் அறிவித்துள்ளது.

ரோம், ஏப். 19—அமெரிக்க மாஜி ஜனாதிபதி கென்னடியின் துணைவியார் ஜாக்குலைன் கென்னடி, 60 வயது நிரம்பியவரும், மூன்று பெண்களுக்குத் தந்தையுமான அண்டோனியோகாரிக்ஸ் என்ற ஸ்பெயின் நாட்டவரை மறுமணம் செய்துகொள்ளப் போவதாக ரோம் இதழ் ஒன்றில்செய்திவெளியிடப்பட்டுள்ளது. இதனை இதுவரை ஜாக்குலைன் மறுக்கவில்லையெனவும், ஜாக்குலைனின் உறவினர்கள் இதுபற்றி முழுச் செய்தியையும் அறிவார்கள் என்றும் தெரிகிறது.

செய்கோன், ஏப். 20 — ஹனாய் அருகில் உள்ள தொழில் நிலையங்கள் மீதான யு. எஸ்.சின் தாக்குதலின்போது, பிரதான விசை நிலையத்தைத் தகர்த்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கோலாலம்பூர். ஏப். 20 — உலகத் தமிழ் மாநாடு, மலாய் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றதையொட்டி இந்திய, தமிழகப் பிரதிநிதிகளாய்ச் சென்றிருந்த குழுவினர், சிறப்பான பணியாற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய உறவுகள், மொழி வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், நாட்டுறவுக்கும் பயன்படும் என்ற கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன.

மாஸ்கோ, ஏப். 21— அந்நிய நாட்டின் உதவியுடன் இந்தியா உரத் தொழில் தொடங்குவது பற்றிய தனது ஆழ்ந்த வருத்தத்தை ரஷ்யா தெரிவித்துள்ளது.

அதிலே ஒன்று, சோவியத் ரஷியாவும் அமெரிக்காவும் மேலும் விரிவான முறையில் ஒத்துழைக்க வேண்டும் என்பதாகும்.

ஆமாம், தம்பி! யாராவது வலதுசாரி மயக்க மடித்து விழப்போகிருர்; ரஷியாவும் அமெரிக்காவும் விரிவான முறையிலே ஒத்துழைக்க வேண்டும் என்பது தான் வாழ்த்தோவியம்!

முதலாளித்துவத்தை வெட்டி வீழ்த்திக் குழி தோண்டிப் புதைத்து, அந்தப் புதைகுழிமீது புதுமைப் பூங்காவை அமைத்து, அங்கிருந்து கிளம்பும் சமதர்ம மணத்தை அவனியெங்கனும் பரவிடச் செய்திடும் பாட்டாளியின் அரசாம் சோவியத் ரஷியாவா, உலக முதலாளித்துவ முகாமாகவும், சோஷியலிசத்தை ஒழிக்கச் சதி நடத்தும் பாசறையாகவும் உள்ள அமெரிக்காவுடன் ஒத்துழைக்க வேண்டும்! புனிதமிகு மே தினத்திலா இந்தப் பேச்சு! ரஷிய கம்யூனிஸ்டு கட்சியிடமிருந்தா! ஐயகோ! அக்ரமம்! அக்ரமம்! அடுக்காது இந்த அநீதி!! என்றெல்லாம் துடிதுடித்திடுவதில் பயன் இல்லை என்பதைக் கூறிடு, தம்பி! அமெரிக்காவுடன் விரிவான முறையில் ரஷியா ஒத்துழைக்க வேண்டும் என்ற வாழ்த்து தயாராகிறது.

அமெரிக்க-ரஷிய ஒத்துழைப்பு, எதற்கு? ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக. உலகிலே புதியதோர் போர் மூண்டிடாமல் நடுத்திட!

அமெரிக்கா தனிஉடைமை தத்துவத்துக்கும் ரஷியா பொதுஉடைமை தத்துவத்துக்கும் கட்டுப்பட்டவையே.

அந்த அடிப்படையிலே விட்டுக் கொடுப்பது; பணிந்து போவது, வளைவது, நெளிவது, இல்லை.

பொதுஉடைமை மூலமாகவே மனித குலம் மாண்பு பெற முடியும் என்ற தத்துவத்தை ரஷியா இழக்கவில்லை; மறக்கவில்லை; வற்புறுத்தத் தவறப்போவதுமில்லை.

ரஷியாவுடன் விரிவான அளவிலே ஒத்துழைப்பதால், அமெரிக்கா பொதுஉடைமைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

ஆனால் அந்த இரு நாடுகளும், உலகிலே போர் மூண்டிடாதிருக்கச் செய்யும் புனிதப் பணியில் ஒத்துழைக்க முனைகின்றன.

தம்பி! சுதந்திராவுடனு...! என்று கோபம் கொப்பளிக்கும் நிலையினில் கேட்கின்றனரே அவர்கள் ரஷியா காட்டிடும் பாடத்தையுமா, என்மீது உள்ள கோபத்தால் மதிக்க மறுக்கவேண்டும்! வேடிக்கையாகத்தான் இருக்கிறது, அந்தப்போக்கு!

இட்லரின் கொடுமையை ஒழிக்க அமெரிக்க ரூசிவெல்டும், சோவியத் ஸ்டாலினும், பிரிட்டிஷ் சர்ச்சிலும் ஒன்று கூடினர்; ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக; நோக்கத்துக்காக.

அதனை உலகமே வியந்து பாராட்டத்தக்க ராஜதந்திரம் என்று கூறினர்; அரசியல் துறை வித்தகர்கள்.

காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்த பிற கட்சிகளுடன் செய்துகொள்ளும், 'உடன்பாடு' பற்றி அதிர்ச்சி கொள்வோர், இந்த மூவர் முகாம் பற்றிய வரலாறு பற்றி ஏன் சிந்திக்கக் கூடாது!

தம்பி! இதனை விரிவாக எழுதுவது, அவர்களை, கண்ணே! வா! வா! கண்மணியே! வா! வா!! என்று அழைத்திட அல்ல. அவர்களேதான் தமது போர் முறையை வகுத்துக்கொள்ள வேண்டும். நான் இது பற்றி எழுதுவதன் காரணம், காமராஜர் இந்த 'உடன்பாடு'பற்றிப் பேசி வருகிருரே, அதுபற்றி விளக்கிடத்தான்.

காங்கிரசை எதிர்க்கும் சக்திகள், 'உடன்பாடு' செய்துகொள்வது அவருக்கு அச்சமூட்டுகிறது.

அதன் காரணமாகவே அவர் ஆத்திரப்பட்டு பொருளற்றனவற்றைக்கூடப் பேசிக்கொண்டு வருகிருர்.

அண்ணன்,

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

ஜெயா பார்மஸி

ஆயுர்வேத வைத்தியசாலை

H. O. பெரியகுளம்

எங்களது பார்மஸியில் உற்பத்தியாகும்

ஆஸவங்களும் அரிஷ்டங்களும்

விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை.
போதுமான கமிஷன் கொடுக்கப்படும்.

N. B:— எங்கள் பார்மஸி சர்க்காரால் (*Recognised by Central Board of Indigenous Madicine Madras.*) அங்கீகரிக்கப்பட்டது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிருேம்.

திண்டுக்கல் பிராஞ்சில் தொடர்புகொள்க:

உரிமையாளர்: **J. M. ராஜன்**

ஜெயா பார்மஸி

6, நேருஜிநகர், மதுரைரோடு, திண்டுக்கல்.

PHONE: 348, 348-A, 438

இருபத்தொன்ரும் பகுதி
ஆற்றங்கரையில்!

"செந்தாமரை! நான் ஏதாவது தவருகக் கேட்டுவிட்டேஞ?"

தூமகேதுவின் குரலிலிருந்த பதைபதைப்பை அறிந்ததும், செந்தாமரை மனத்திற்குள்ளேயே ஒரு திருப்தியடைந்தாள்.

"என்னை வளர்த்தவள் முத்தம்மாள் என்று நான் சொன்னதும், அவளிடம் என்னைக் கொண்டுவந்து விட்டது யார் என்றும், அவள் என்னை வளர்க்கவேண்டிய காரணம் என்னவென்றும், நீங்கள் கேட்டீர்கள் அல்லவா?"

"ஆமாம், கேட்டேன்! அதில் என்ன தவறு?"

"தங்களது இந்தக் கேள்வி, என் பெற்ருேர்பற்றி முத்தம்மாள் சொன்னதை நினைவிற்குக் கொண்டு வந்தது! அந்த நினைவு என் உள்ளத்தில் துக்கத்தைப் பொங்கச் செய்துவிட்டது!"

"உன் பெற்ருேரைப் பற்றியா? என்ன சொன்ஞள்?"

"பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பொரு நாள், அவள் நாட்டிய மாடச் சீவில்லிபுத்தூருக்குச்சென்று விட்டு, மாட்டு வண்டியில மதுரைக்குத் திரும்பினுளாம்! காட்டுப் பாதையில் வண்டி வந்து கொண்டிருக்கும் போது, 'அய்யோ! அய்யோ!' என்று அலறியடித்துக் கொண்டு, ஒருவன் வண்டியை நோக்கி ஓடிவந்தாஞம்! நெற்றியில் பட்டை பட்டையாக இருந்த நாமம், அவனொரு வைணவன் என்பதைச் சங்கொலி செய்ததாம்! மூச்சு வாங்க நின்ற அவனுல் ஒன்றுமே பேசமுடியாமல் சிறிது நேரம் திணறினுன்! என்ன செய்தி, ஏன் அலறுகிறீர்! என்று கேட்டபடி, முத்தம்மாள் வண்டியை விட்டுக் கீழே இறங்கினுள். 'கொலை! கொலை! இருவர் கொலை!' என்று அவன் நடுங்கிக்கொண்டே கூறினுன். 'யாரை யார் கொலை செய்து விட்டார்கள்? அதற்கு எங்களை என்ன செய்யச் சொல்கிருய்!' என்று கூறிவிட்டு, 'விடு வண்டியை!' என்ருள். 'அம்மா! போகாதீர்கள், கொஞ்சம் இருங்கள்! கொலைசெய்யப்பட்டுக் கிடப்பவர்கள் யார், கொலை செய்தவன் எவன்—அந்த விவரங்கள் ஒன்றும் எனக்குத் தெரியாது! ஆனுல் அவர்கள் அருகே, ஒரு பிஞ்சுக் குழந்தை உயிரோடு கைகால்களை ஆட்டிக் கொண்டு இருக்கிறது!' என்ருனும், அந்த நாமக்காரனையும் வண்டிக்காரனையும் அழைத்துக்கொண்டு, குழந்தையைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அவ்விடத்திற்கு அவள் சென்ருள். புதர்களுக்குள்ளே அவர்கள் புகுந்து சென்ற போது, அங்கே திடீர் என்று எழுந்த சப்தத்தைக் கேட்டதும், அவர்கள் அனைவரும் திடுக்கிட்டுவிட்டார்கள்! பிறகுதான் தெரிந்ததாம். பிணத்தைத் தின்றுகொண்டிருந்த கழுகு அவர்களைக் கண்டு பயந்தோடிய சப்தம் அது என்று! கணவனும் மனைவியும் போலத் தெரிந்த இளம் வயதினர் இருவர், அங்கே கொலையுண்டு கிடந்தனர். அங்கே ஓடிக் கொண்டிருந்த இரத்தத்தைப் பார்த்ததும், அந்த ஆணும் பெண்ணும் சிறிது நேரத்திற்கு முன்னர்தான் கொலைசெய்யப்பட்டிருக்க வேண்டுமென்று அவர்கள் தெரிந்துகொண்டார்கள்! அவர்கள் பக்கத்தில் புற்றரையில், ஆறு ஏழு மாதப் பெண் குழந்தை ஒன்று கைகால்களை ஆட்டிச் சிரித்துக் கொண்டிருந்ததாம்! அந்தக் குழந்தையின் சிரிப்பைக் கண்டதும், முத்தம்மாளின் மனதிலிருந்த பயமெல்லாம் ஓர் நொடியில், எங்கோ ஓடிவிட்டதாம்!..."

"அந்தக் குழந்தைதான் நீயா?"

"ஆமாம்! அப்படிக் கொலையுண்டு கிடந்தவர்கள் யார், எந்த ஊர் ஆகிய விவரங்களை அறிய முத்தம்மாள் எவ்வளவோ முயற்சி செய்தாளாம்! கடைசிவரைக்கும் அவளால் ஒன்றுமே தெரிந்துகொள்ள முடியவில்லையாம்!"

"முத்தம்மாளும் ஒரு நாட்டியக்காரியா?"

"ஆமாம்!"

"அவளுக்குச் சொந்தக் குழந்தைகள் எத்தனை? கணவன் யார்? அவர்களெல்லாம் இப்பொழுது எங்கே இருக்கிருர்கள்?"

"நாட்டியக் கலைக்குத் தன்னை அர்ப்பணித்துவிட்ட முத்தம்மாள் கடைசி வரைக்கும் கல்யாணமே செய்துகொள்ளவில்லை! வீரபாண்டியன் இந்த மதுரையை ஆண்ட அந்த சில நாட்களில், ஒரு இலங்கைப் போர்வீரனின் வெறியுணர்ச்சிக்கு, அவள் பலியாஞள்!"

"கேட்கிறேனே என்று தவருக எண்ணிவிடாதே! முக்கியமான கேள்வி...உன் இதயத்தில் எந்த ஆணழகனுக்காகிலும், இடம் கொடுதது இருக்கிருயா?"

இந்தக் கேள்வி, அவளது செவ்விதழ்களிலே புன்னகையைக் கொண்டுவந்து நிறுத்தியது. அவள் தலையாட்டி "இல்லை!" என்ருள்.

"திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம்......"

"என் மனதில் எழுந்ததே கிடையாது! இனிமேலும் தோன்ருது! முத்தம்மாளைப்போலவே நானும் கன்னியாகவே காலங்கழிக்க—கலைக்குச் சேவை செய்ய — முடிவுசெய்து விட்டேன்!"

"அதென்ன அவ்வளவு சுலபமான காரியமா!"

"சாதாரணப் பெண்ணுக்கு வேண்டுமானுல அது கடினமாக இருக்கலாம்! நான கலைத்துறையில் மூழ்கிவிட்டவள்! கணவன, குழநதை, சகலமும் எனக்குக கலையே! என் கன்னி யுள்ளத்தில் கலையைத தவிர வேறு நினைப்பு எழாது! எழவும விடமாடடேன்."

"நான் மகிழ்ச்சியடைகிறேன்!"

"எதற்காக?"

"உன் உறுதிக்காக! செந்தாமரை, கேட்கவேண்டியவற்றைக் கேட்டாகிவிட்டன! உன்னை நான் பூர்ணமாக நம்புகிறேன்! என்நம்பிக்கைக்குத் துரோகம் செய்கிருய் என்ற சந்தேகம் பிறந்தால்..."

"நாட்டுக்குத் துரோகம் செய்த பொன்னையாவின் கதிதான் எனக்கும், என்பதை அறியாதவள் அல்ல நான்?"

"செல்லலாம் என்று எண்ணிய போது, நல்ல வேளையாகப் பொன்னையாவைக்குறிதது நீ கவனப்படுத்தினுய்? பொன்னையா ஏதோ ரகசிய சங்கம் வைத்திருந்தானும்! அச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், நாட்டின் பல பாகங்களிலும் இருக்கிருர்களாம்! பொன்னையாவிற்குப் பிறகு, அச் சங்கத்தை இப்பொழுது சோலையப்பன் நடத்திவருவதாகத் தெரிகிறது! அச்சங்கத்தின் திட்டங்கள்—அதிலே யார் யார் முக்கிய உறுப்பினர்களாக இருக்கிருாகள்- என்ற விவரங்களை, நீ சோலையப்பனிடமிருந்து அறிந்துகொள்ள வேண்டும்?"

"நான் கேட்டாலும் கேட்காவிட்டாலும், அவனுகவே இனி அவற்றை என் எதிரில் கொட்டி விடமாட்டாஞ?"

"ஆமாம் நீயும் கொஞ்சம் எச்சரிகையோடே நடந்துகொள்; ஏனென்ருல், நீயோ கன்னி—அவனே அழகன்! அவனுக்கு நீ போதை உணடாக்கிவிட்டாய்! அந்தப் போதையில் ஓர் துளியை, உனக்குத் திருப்பித தந்துவிடப் போகிருன் அவன்!"

"நெருப்பிற்கு அருகேவரும் பஞசு பற்றியெரிந்து கருகிவிடுமே அனறி—நெருப்பு பஞ்சாக மாறுவதிலலை!"

"ஆமாம், அந்த உறுதி நிலைத்திருககுமபடிபபார்த்துககொள்!இனனுமொனறு, இனறு பாணடியநாடு எந்த நிலைமையிலருககிறது தெரியுமா?"

"சிங்களப்படைகள் சேர நாட்டில் வந்து இறஙகிக கொண்டிருப்பதாக, அனறுருரு நாள சொனனீாகளே!"

'இலங்கை அரசன் பராககிரமபாகுவும் அவன் மகள் திருமேனியும சேரநாட்டின தலை நகாில வந்து தங்கியிருககிருாகளாம! இவ்வூா கோட்டைச் சுவரின மீது வைககப் பட்டுள்ள இந்த இலஙகைத் தளபதிகளின் தலைகள—பராககிரமபாகுவின் மனதிலே, தணியாத கோபக் கனலை உண்டாக்கிவிட்டிருக்கிறது! எப்படியும் குலசேகர பாண்டியின் தலையை வெட்டியெடுத்துச் சென்று இலங்கைக் கோட்டையின் மீது வைக்கப்போவதாகவும், இல்லையேல் தன்னுட்டிற்குத் திரும்பப் போவதில்லை என்றும் சபதம் செய்திருக்கிருனும்! இத்தகைய நெருக்கடியான நேரத்தில், நாட்டினுள்ளே வாழும் துரோகிகளை நாம் பூண்டோடு அழித்தாக வேண்டும்! இல்லையேல் இந்த நாடே அடிமைப் பட்டுவிடும்!"

"திருமேனி இங்கு வந்திருப்பதிலிருந்து—தந்தையோடு அவளும் போர்க்களம் புகுவாள் என்று சொல்லுங்கள்!"

"அவளொரு பைத்தியம்!"

'என்ன, அவளொரு பைத்தியமா? 'திருமேனி நல்ல அழகி! ஆண்வேடம் அணிந்து போர்க்களம் செல்வாள்! சகல கலைகளிலும் வல்லவள்! என்றெல்லாம் அவளைப் பற்றிப் புகழ்ந்து பேசுவார்களே!"

"அது ஓர் ஆண்டிற்கு முன்பு!"

"தங்கள் பேச்சு எனக்குப் புரியவில்லையே?"

"இப்பொழுது அவளுக்குப் புத்தி மாருட்டம் ஏற்பட்டுவிட்டதாம்! சுய நினைவே அவளுக்குக கிடையாதாம்! அரணமனையைவிட்டு அடிக்கடி காட்டிற்குச் செல்லவேண்டும் என்கிருளாம்! தோழிகளோடு காட்டிலே சுற்றுமபோதுதான், அவள் கொஞ்சம் மகிழ்சசியோடு இருக்கிருளாம! மற்ற நேரங்களில், அழுவதும் கத்துவதுமாக இருக்கிருளாம்!'

"அய்யோ பாவம்!"

"எதிரியின் மகளுக்காகவா இரக்கப்படுகிருய்?"

"யாராய் இருந்தால் என்ன! இப்படி ஒருபெண்ணின் வாழ்வு பாழாகிவிட்டதென்ருல், அது பரிதாபப்பட வேண்டிய செய்திதானே!"

"பாம்பில் ஆணுய் இருந்தாலும் பெண்ணுய் இருந்தாலும், இரண்டும் ஒன்றுதான் விஷம் கக்குவதில்! ...சரி, செந்தாமரை நேரமாகிறது — அரசரைவேறு போய்ப் பார்க்க வேண்டும்! நான் வரட்டுமா!"

"நம் அரசரின் வயிற்றுவலி எப்படியிருக்கிறது?"

"என்ன செய்வது, எவ்வளவோ வைத்தியர்கள் தினந்தினம் வருகிருர்கள்—ஆனுல் வலி என்னமோ இனனும் கொஞ்சங்கூடக் குறையவில்லை! நான் வரட்டுமா?"

"நமஸ்காரம்!"

அவன் உருவம் மறைந்ததும், "இரர்சாதிராசன் கேட்டானும விவரம் கேட்க வந்துவிட்டான் இவன், ஓலையும் கையுமாக!" என்று முணுமுணுத்தபடி, அவள் மாடிப்படிகளில ஏறினுள்.

"என்னம்மா, வந்தவருக்குப் பால் கூடத் தராமல் அனுப்பிவிட்டீரே?" என்று கேட்டபடி, தோழி சிதாரி அவளைப் பின்தொடர்ந்தாள்.

"பாம்பிற்கு எவ்வளவுதான் பால் வார்த்தாலும், அதன் விஷம் மாருதடி" என்று வெறுப்போடுசொல்லிவிட்டு, அவள் கட்டிலறையினுள் நுழைந்தாள்.

ஒருவாரத்திற்குப் பிறகு ஒரு நாள் தோழியோடு செந்தாமரை வைகை யாற்றங்கரைமீது உலாவச் சென்ற போது, அங்கே வேகமாகச்சென்று கொண்டிருந்த சோலையப்பனைக் கண்டாள்.

"சிதாரி, அதோ போகிருர் பார்!"

"ஆமாம் அம்மா, சோலையப்பன் தான்!"

"ஓடிச் சென்று, நான் இங்கே இருப்பதாக அவரிடம் சொல்!"

தோழி சென்று சொன்னதும் அவன முகம் மலர்ந்தது. அந்த அழகியின் பக்கத்தில் கால்கள் இழுத்துக்கொணடு வந்து அவனை நிறுத்திவிட்டன.

"மறந்தேவிட்டீர்கள் போலிருக்கிறதே, என்னை!" என்று குறும்புப் புனனகையோடு செந்தாமரை கேட்டாள்.

"மறந்துவிடுவதா? உன்னையா? என் உயிரையா?" என்று சொல்லிக்கொண்டே அவன் அருகே நேருங்கினன்.

"இதென்ன உடலோடு உடல் படும்படியாக இப்படி அருகிலவருகிறீரே! பக்கத்தில் பாரும் தோழியிருக்கிருள்!" என்று கூறும பாவனையில், கண்ணுல் தோழியைக் காட்டிவிட்டு, அவள் சிறிது பின்ஞல் நகர்ந்து நின்ருள.

"வாருங்களேன், இப்படி ஆற்று மணலில் சிறுது நேரம் உட்காரலாம்!"

"சிறிது நேரம் என்ன, வாழ் நாள் முழுவதுமே உட்கார்ந்துகொண்டிருககலாம், செந்தாமரை! ஆனல் ஒரு அவசரமான வேலை..."

"பெண்கள்மீது ஆண்கள் காட்டும் அன்பே இப்படித்தானே! வேறு வேலைகளிலிருந்தால் முதலில் அவற்றையெல்லாம் கவனித்துவிட்டு, ஓய்வு நேரத்தை உல்லாசமாகக் கழிக்க அணங்குகளைத்தேடி வருவார்கள்! ஆணகளின் ஓய்வு நேர விளையாட்டுத்தானே காதல்? பெண்களுக்கோ அது முழுநேர நினைப்பாக, வாழ்வின மூசசாக ஆகிவிடுகிறது!" என்று கோபத்தோடு சொல்லியபடி முகத்தை அவன் வேறுதிசையில் திருப்பிக் கொண்டாள்.

"கோபித்துக்கொள்கிருயே செந்தாமரை, இரவு நான் வருகிறேன்!"

"எதற்கு — ஓய்விற்கா? வேணடாம், நீங்கள் வரவே வேணடாம! என்னைப் பார்க்கவும் வேண்டாம்!"

"பெண்களை ஓய்வுநேர விளையாட்டுப் பதுமையாக எண்ணும் கயவா கூட்டத்தைச் சேர்ந்தவன் அல்ல நான! உன்னை என் வாழ்வின் ஒளியாக நம்பியிருக்கிறேன்!"

"தங்களின் வாழ்வின் ஒளியா நான்?"

"ஏன் என் சொல்லை நீ நம்பவில்லையா?"

"எப்படி நம்பமுடியும்? அன்று ஆசையோடு பேசிவிட்டுப் பிரிந்தவர், அதன் பிறகு ஒருவாரமாகியும என்னைப்பார்க்கவேணடுமென்ற நினைபபு தங்களுககு உணடாகவில்லையே! உணமையான அன்பு இருந்திருந்தால், என் முகததைப் பார்க்காமல் உம்மால் ஒருநாளும இருந்திருக்க முடியாதே!"

"இந்த ஏழு நாட்களாக உன்னைப் பார்ககாமல், நான் தவித்த தவிப்பைச் சொன்ஞல் நீ நம்பப போகிருயா? ஒரு முக்கியமான கடமை-அதை முடிக்காமல் ஊண் உறக்கம் கூடக கொளவதில்லை என்ற வைராக்கியததில் இருந்தேன! கடைசியில் இன்று காலை தான அந்தவேலை முடிந்தது—இனறிரவே உன்னை வந்து பாரகக இருநதேன்!"

"அது என்ன அப்படி முக்கிய மான வேலை?"

தோழி பக்கத்திலிருக்கிருளே சொல்லலாமா, கூடாதா என்று அவன் யோசிததான். அவனது தயக்கத்தின் காரணத்தை உணர்ந்துகொண்ட செந்தாமரை 'சிதாரி, நீ கொஞ்சம் அப்படிப் போய் இரு—பிறகு அழைக்கிறேன்!' என்ருள்.

"சொல்லுங்கள்!"

"செந்தாமரை! இந்தத் தூம கேதுவை மட்டுமல்ல. குலசேகரனைக்கூட நாம் நினைததால் ஒழித்துவிடமுடியும்!"

"எப்படி?"

"அத்தகைய ஏற்பாடுகளை ஒழுங்காகச் செய்துவைத்திருக்கிருன், பொன்னையா! அவனொருவனே உழைத்து, எவ்வளவுபெரிய வேலையை எப்படிச் செயதிருக்கிருன் தெரியுமா? அவ்வளவும் செய்த அந்த ஆற்றல் வீரன், அவசரப்பட்டு ஆபததில சிக்கிக்கொண்டானே என்று நினைககும்போது தான், துக்கம் மேலிடுகிறது!"

"ஏன நிறுத்திவிட்டீர்கள்—சொல்லிக்கொணடே இருங்கள்! கொஞ்சங்கூட எனக்குப் புரியாதவிதத்திலே, எதையாவது சொல்லிக் கொண்டே இருங்கள!"

"அவசரப்படுகிருயே கண்ணே, உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப்போகிறேன் நான்?...பொன்னையாவின்கல்லறை மீது நான் மாலைபோட்ட அன்றிரவு, அங்கு நீ வந்தாயே — அது நினைவிருகக்றதா உனக்கு?"

"நன்ருகக் கேட்டீர்கள்! என் வாழ்க்கையிலேயே முக்கியமான இரவாயிற்றே — அதையா நான் மறப்பேன்?"

"அப்பொழுது அஞ்சலையைப் பற்றி, நீ நினைவுபடுத்திஞய் அல்லவா?"

"ஆமாம், அன்றிரவு அவள் வீட்டிற்கும் தாங்கள் சென்றீகள் என்பதையும், நான் அறிவேன்!"

"அன்றிரவு அங்கே சென்ற போது, அஞ்சலை ஒரு ஓலை தந்தாள் —பொன்னையா கொடுக்கும்படிச் சொன்னதாகச் சொல்லி! பசுமலையின் தென்கிழக்குப் பாகத்தில் ஒரு குகை இருக்கிறது என்றும, அதிலே சில முக்கியமான ஓலைகள் இருப்பதாகவும, அவற்றை நான படித்துப்பார்த்துச் செயலாற்ற வேண்டுமென்றும், பொன்னையா அந்த ஓலையில் எழுதியிருந்தான்!"

'முன்னேற்பாட்டோடுதான் பொன்னையா, வேல எறிநதார் என்று சொல்லுங்கள்!'

"அவன் வேல் எறியப்போவது. அஞ்சலையைத் தவிர எனக்குக் கூடத் தெரியாது!"

"இப்படிச் செய்யப்போகிறேன் என்று உம்மிடம் ஒரு சொல்கூட அவர் சொல்லவில்லையா! ஆச்சரியமாக இருக்கிறதே!"

"சொன்ஞல், வேண்டாம்—அவசரப்படாதே — என்று நான் தடுப்பேன் என்பது அவனுக்கு நன்ருகத் தெரியும்! ஆகவே என்னிடம் கூடச் சொல்லாமல், ஆபத்தில் சிக்கிவிட்டான்! உன் வீட்டிற்கு வந்துவிட்டு வந்தேனே — அன்று மாலை முதலே அந்த குகை எங்கிருக்கிறது என்று கண்டுபிடிக்கும் வேலையில், நான் ஈடுபட்டுவிட்டேன!"

"அதுதானே பார்த்தேன்—இவ்வளவு பெரிய முக்கியமான வேலை இல்லாமலிருந்திருந்தால் — ஒருவாரமாக என்னைப் பார்க்காமல், உம்மால் இருந்திருக்க முடியாதே!

அமைதியாக இருந்த என்மனதிலே புயலை எழுப்பிவிட்டு, தனிமையில் என்னைத் தவிக்கும்படி விட்டுவிட்டுச் சென்று, நாட்களாகியும் தாங்கள் வராததினால், நான் எவ்வளவு ஆத்திரமும் அழுகையும்கொண்டேன் தெரியுமா?”

“உனக்கு மட்டுந்தானா, எனக்கும் வேதனையாகத்தான் இருந்தது! எப்படியாவது அந்தக் குகையைக் கண்டுபிடித்தாக வேண்டுமே என்ற வைராக்கியத்தில் இரவும் பகலுமாக அந்த மலையடிவாரத்திலேயே சுற்றிக்கொண்டிருந்தேன்! இன்று காலைதான் அந்தக் குகை என் கண்ணில்பட்டது, செந்தாமரை!”

“கண்டு பிடித்துவிட்டீர்களா?”

“ஆமாம் கண்ணே, பசுமலையின் தென் கிழக்குப் பாகத்தில் தனியாக இரட்டைக் கிளை பனை மரம் ஒன்று இருக்கிறது! அந்த பனை மரத்திற்கு நேர் மேற்கே ஒரு புதர் அந்தப் புதரினுள் புகுந்து சென்றால் ஒரு சுனை! அந்தச் சுனையைச் சேர்ந்தது போலவே அந்தக் குகையுமிருக்கிறது! அந்தக் குகையினுள் நுழைந்தால் ஒரே இருள்—மையிருள்! கையிலே தீப்பந்தம் இல்லாமல் உள்ளே போக முடியாது! கல்லையும் முள்ளையும், சிலந்திக் கூடுகளையும், வௌவால்களையும் பொருட்படுத்தாமல் உள்ளே நுழைந்து சென்றால் வழியை அடைத்துக் கொண்டு ஒரு பெரிய கல் நிற்கிறது! அதை எப்படி நகரச் செய்வது என்பது தெரியாமல் வெகு நேரம் சிரமப்பட்டேன்! கடைசியாக அந்தக் கல்லின் மத்தியில் ஒரு சிறு புள்ளியிருப்பது தெரிந்தது அந்தப் புள்ளிக்கு இரு பக்கங்களிலும் கையை வைத்து வேகமாகத் தள்ளினால், அவ்வளவு பெரிய கல்—நேராகப் பின்னால் நகருகிறது. அதன் இடுக்கிலே நுழைந்து சென்றால், உள்ளே ஒரு பெரிய அறை இருக்கிறது!”

“ஆச்சரியமாக இருக்கிறதே—இவ்வளவையுமா பொன்னையா செய்திருக்கிறார்?”

“பொன்னையா செய்த ஏற்பாடுகள் அல்ல அவை கொஞ்ச காலத்திற்குமுன்பு யாரோ ஒரு பெரிய திருடன் இருந்தானாம்—அவனது குகையாம் அது! அந்த விவரம் அங்கேயுள்ள ஒரு ஓலையில் இருக்கிறது!”

அந்த அறையில் பொன்னையா என்ன வைத்திருக்கிறார்?”

“யார் யார் அவன் இலட்சியத்தை ஒத்துக் கொண்டார்களோ—அவர்களின் விவரமெல்லாம் ஓலைகளில் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன! நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாமிருந்து கூட, பொன்னையாவோடு தோளோடு தோள் நின்று வேலை செய்ய இசைந்து பலர் ஓலை எழுதியிருக்கிறார்கள். எவ்வளவு ஆர்வத்தோடும் ஆவேசத்தோடும் அந்த ஓலைகள் எழுதப்பட்டிருக்கின்றன தெரியுமா? அவற்றையெல்லாம் படிக்கப் படிக்க, என் மனம் பூரிப்பும் புதுமுறுக்கும் கொள்கிறது எல்லாவற்றையும் படித்து முடித்துவிட்டால், நாலும் பொன்னையா போல அதி தீவிரவாதியாகிவிட்டாலும், ஆகிவிடுவேன்! எண்ண முடியாத அளவிற்கு ஓலைக்கட்டுகள் அங்கே உள்ளன! அவற்றிலே இன்னும் அரைக்கால் பாகத்தைக் கூட நான் படித்து முடிக்கவில்லை! நாளை காலைகூட அங்குதான் நான் செல்லப்போகிறேன்! நேரமாகிறது செந்தாமரை, நான் வருகிறேன்!”

“ஏதோ அவசரமான வேலையாகச் செல்வதாகக் கூறினீர்களே!”

“ஆமாம், அந்த வேலையாகத் தான் செல்கிறேன்!”

“அந்தக் குகைதான் கண்டு பிடித்தாகிவிட்டதே—வேறு என்ன அப்படி அவசரமான வேலை?”

அதையும் சென்னால் நேரம் இன்னும் அதிகமாகிவிடும்! இரவுதான் வருவதாகச் சென்னேனே—அப்பொழுது சொல்லாமலா போவேன்!

இன்னும் அதிகமாகக் கேட்டால் அவன் மனதில் ஏதாவது சந்தேகம் வந்துவிடும் என்றெண்ணி, ‘சரி தவறாமல் இரவு வரவேண்டும்! பிறகு அந்தக் கடமை இந்தன் கடமை என்று நின்றுவிடப் போகிறீர்கள்! காதலும் ஒரு கடமைதாக—நினைவிருக்கட்டும்! வழிமேல் விழி வைத்திருப்பேன் — மறந்துவிடாதீர்கள்!’ என்றாள் புன்னகையோடு.

“அதை நீ சொல்லவும் வேண்டுமா? என்று கூறிக் கொண்டே அவள் கன்னத்தைக் கிள்ள நெருங்கினான்.

“விளையாட இதுதானா இடம்?” என்று நாணம் கொண்டவளைப் போலச் சொல்லி அவனுக்கு எட்டாத தூரத்தில் போய் நின்றாள்.

“இரவு வருகிறேன்!”

“காத்திருப்பேன்!”

சோலையப்பன் சென்றுவிட்டதும் சிதாரி அருகே வந்தாள்.

“என்னம்மா, இவ்வளவு நேரம் பேசியதில் ஏதாவது தகவல் கிடைத்ததா?”

“சிதாரி முக்கியமான இரகசியம் தெரிந்துவிட்டது!”

‘அதென்னம்மா?’

“பசுமலையில் ஒரு குகையில் பொன்னையா இரகசிய ஓலை வைத்திருக்கிறானாம்!”

‘அப்படியா?’

“ஆமாம். புறப்படு போகலாம்!”

“இப்பொழுதுதானே வந்தோம்-கொஞ்ச நேரம் மணலில் உட்கார்ந்துவிட்டுச் செல்லலாமே!”

வீட்டிற்கு அல்லடி இப்பொழுது நாம் போகவேண்டியது!”

‘வேறு?’

“தூமகேதுவைப் பார்த்தாக வேண்டும் — இந்தச் செய்தியை உடனே அவரிடம் சொல்லியாக வேண்டும்!” என்றி கூறி தோழியின் முதுகில் அவள் தட்டிக கொடுத்தாள். [வளரும்]

தேர்தலுக்குப் பத்து மாதங்கள் இருக்கின்றன......

ஊகங்கள், கணிப்புகள், அறிவிப்புகள் வரத் தொடங்கிவிட்டன.......

தமிழகம், கேரளம், மே. வங்கம், மத்திய பிரதேசம், பஞ்சாப், உத்திரபிரதேசம்

இங்கெல்லாம் காங்கிரஸ் ஆட்சி அகற்றப்படவிருக்கிறது!

காமராசருக்குக் கவனப்படுத்துங்கள்!!

[6—4—66ல் ‘பிரிபிரஸ் ஜானல்’ இதழில் சாமிநாதன் என்பவர் கட்டுரை எழுதியிருக்கிறார் இப்படி!]

கேள்வி ? பதில்

(1) திங்கட்கிழமை இரவு உணவுவிடுதிகளை மூடிவிடவேண்டும் என்பதற்குச் சட்டம் ஏதேனும் இருக்கிறதா?

சிரிப்பு வருகிறது, இந்தக் கேள்வியையும் இதற்கான பின்னணியையும் நினைக்க. 'வேண்டுகோள்'களை எல்லாமே சட்டமாகப் பாவிக்கும் பரந்த மனப்பாங்குடையவர்கள் ஐயா நம்மவர்கள்! இப்படியொரு சட்டம், கொண்டுவரப்பட்டுவிட்டால், அப்புறம் 'ஜனநாயகம்' தங்கள் தனியுடைமை என்பவர்கள் எல்லாம் தற்கொலை செய்துகொள்ள வேண்டியிருக்குமே!

(2) இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்கள் எந்த அடிப்படையில் வகுக்கப்பட்டன என்பதற்கு விளக்கம் தேவை; தரமுடியுமா உங்களால்?

புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகள், தங்கள் வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்துக் கொள்ளுமுன வளர்சசியடைந்து வந்துள்ள சில நாடுகளின் திட்டங்களை ஆராய்ந்து பார்ப்பதுவழக்கம். ஆனால், இந்தியாவைப் பொறுத்த வரையில், வளர்ச்சியடைந்துள்ள சில நாடுகளின் — திட்டங்களை என்று சொல்லமாட்டேன்--தன்மைகளை மனதில் நினைத்துக்கொண்டு உருவாக்கிவிட்டார்கள்; சில நாடுகளின் முன்னேற்றத்துக்குத் தொழில் திட்டங்கள் பயன்பட்டிருக்கின்றன; சில நாடுகள், விவசாயத் திட்டங்களால்தான் முன்னேற முடியும். தங்கள் நாட்டின் தகுதி, தன்மை இவைகளுக்கேற்ப, முதன் முதலாக வகுக்கப்பட வேண்டியது விவசாயத் திட்டமா? தொழில் திட்டமா என்பதை நிர்ணயித்துக் கொள்வார்கள். நிர்ணயித்துக் கொள்ளப்பட்ட முடிவுப்படி, அந்தத் திட்டத்துக்கான பூர்வாங்க யோசனைகள் செய்யப்பட்டு, படிப்படியாக முடிவெடுக்கப்படும். இறுதி செய்யப்படும்.

'வளர்ச்சியடைந்துள்ள சில நாடுகளின் முன்னேற்றத்திற்குத் தொழில் திட்டமே காரணம்' என்று இந்தியாவில் சிலர் நினைத்துக்கொண்டு, தங்கள் திட்டங்களை வகுத்துவிட்டார்கள்'

—என்று அமெரிக்காவின் இந்தியத் தூதர் செஸ்டர் பௌல்ஸ், ஒரு நூலில் குறிப்பிடுகிறார். இந்தியாவில் 80 சத வீதத்தினர் கிராம மக்கள்—இது ஒரு விவசாய நாடு என்று வரலாற்றில் காணப்படுகிறது. புரிந்துகொள்ளுங்களேன்!

(3) ஜனத்தொகையைக் கட்டுப் படுத்த முடியாத நிலையில் இந்தியாவின் உணவுப் பஞ்சத்தைப் போக்க வழி ஏதேனும் உண்டா?

இல்லையென்று, இப்போது இந்த நாட்டை ஆண்டுகொண்டு வருபவர்கள்தான கூறி ஆயாசப்பட்டுக் கொள்கிறார்கள். ஆனால், உருப்படியான பயன் தரத்தக்க —நிலச் சீர்திருத்தத்தை ஒழுங்காகவும், கண்ணியமான முறையிலும் செயல்படுத்துவதின் மூலம், விவசாயத்திற்குப்போதிய அளவு உரவகைகளைப் பயன்படுத்தியும், நவீன உற்பத்தி முறைகளைக் கையாண்டும், விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களது மனக் குறைகளைக் கண்டறிந்து, அவற்றைப போக்குவதன வாயிலாகவும், எல்லாவற்றுக்கும் மேலாக, அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கடன், உதவித் திட்டங்களை அவர்கள் இலகுவிலும், தாமதமின்றியும் கிடைக்கும் தடைகளும் தரகுகளும் அகற்றப்படுவதின் மூலமும், இப்போதைய உற்பததி அளவைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகம் விளைச்சல் பெறமுடியும் என்று இத்துறை வல்லுநர்கள் கருத்தறிவிக்கிறார்கள்.

●

2-ம் பக்கத் தொடர்ச்சி

அணுவளவும் பிறழாமல் வரிக்கு வரி பிரதிபலித்துதான் ஆண்டு அறிக்கையைத் தயாரித்திருக்கின்றனர் வெளிவிவகார அமைச்சரவை அதிகாரிகள் எனவே தவறு அதிகாரிகளுடையது அல்ல. காட்டிய பாதையில் சென்றிருக்கின்றனர் அவர்கள். காட்டப்பட்ட பாதைதான் சரியானது அல்ல.

ஏற்கனவே அரசு மொத்தமாக வெளிநாட்டுக்கொள்கையாக வியட்நாம் பற்றித் தெரிவித்த முடிவுக்கும் அமைச்சர் பாராளுமன்றத்தில் பேசியதற்கும் கொள்கைக் குழப்பம் எழுந்திருக்கிறது. குழப்பத்தை உருவாக்கியவர் அமைச்சர். பாட்டில் பதத்தை நழுவ விட்டுவிட்டுப் பக்க வாத்தியக்காரர்களைக் கனல்கக்கப் பார்ப்பதிலோ கண்டிப்பதிலோ என்ன பயன்?

வெளிவிவகார அமைச்சர் வியட்நாம் பிரச்சனையை எவ்வாறு புரிந்துகொண்டிருக்கிறார் என்பதைக் காட்டுவதற்காகக் காற்று வாக்கினில் கேட்டதாக ஒரு பயங்கரமான வேடிக்கை விமர்சனத்தைப்பம்பாய் வார இதழ் ஒன்று இரு ஆண்டுகளுக்கு முன்னால் எழுதியது. "தெற்கு வியட்நாம் என்பது வடக்குவியட்நாமுக்குவடக்கேஇருப்பது; வடக்கு வியட்நாம் என்பது தெற்கு வியட்நாமுக்கு வடக்கே இருப்பது! இதுதான் வியட்நாம் பிரச்சனை" என்று பேசின ஒரு சமயம்.

இது வேடிக்கைக்காக அந்த ஏடு வெளியிட்டதகவல் என்றாலும், அரசாங்கக் கொள்கைக்கு மாறாக சென்ற ஆகஸ்ட்டில் மாநிலங்கள் அவையில பேசியுள்ளாரே அதை என்னவாகக் கொள்வது? அதனால் எழுந்த குழப்பதுக்கும பரபரப்புகளும கடைசியில் அதிகாரிகளல்லவா பலியாக்கப் பட்டிருக்கிறார்கள்?

'ஆண்டு அறிக்கையில் ஏற்பட்டுவிட்டவருந்தத்தக்கதவற்றைப் புரிந்தது எனது அலுவலகம்; நாட்டுக் கொளகையாக அதை ஏற்றுக் கொணடுவிடவேண்டாம்'எனமனம் துணிந்து அமெரிக்க அதிகாரியிடம் விளக்கமளித்திருக்கிறாரே அமைச்சர்!

கூட்டத்தில்தான் குறை என்று கூறி மழுப்பிய நாட்டியககாரியின ஆட்டததில்தான் பழுது என்பதைக் கண்டு கொள்ள பார்வையாளர்களுக்கு அதிக நேரமா பிடித்தது?

— யாரோ

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணுதுரை.